தலைப்பு 140 – மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

1. நிதிக் கூற்றுக்கள்

-------------------------

**1.1** கணக்காய்வு அபிப்பிராயம்

-------------------------------------

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலை பற்றிய கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சற் கூற்றுக்கள் உள்ளடங்கலாக 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் விதிகளுடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அதிகாரத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் (11)1 உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் நிதிக் கூற்று தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலான தொகுப்பு அறிக்கை 2019 05 31ஆம் திகதி தலைமைக் கணக்கியல் அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் (11)2 உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 05 31ஆம் திகதி தலைமைக் கணக்கியல் அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் உறுப்புரைக்கு அமைவாக இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2018 திசெம்பா் 31 இல் உள்ளவாறான மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1**.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தல்

---

**1.6.**1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கிற்கு 2018ஆம் ஆண்டின் ஊடாக ரூபா 1,407,650 பெறுமதியான நேரடி செலுத்துதல்கள் வரவு வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அந்த வரவுகளை இனங்கண்டு 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிச் செயலாற்றுகைக் கூற்றிற்கும் மற்றும் அரச வருமானத்திற்கும் வைப்பிலிட நடவடிக்கை | குறிப்பிட்ட திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து வருடத்திற்கு உரிய வருமானங்களை இனம் கண்டு கணக்குகளில் வைப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டு தொடர்பாக இனம் காணப்படாத நேரடி செலுத்தல் நிதி ரூபா 1,407,650 நிதியில் 2019.04.30 ஆம் திகதியாகும் போது ரூபா 959,387.60 அளவு நிதி தீர்க்கப்பட்டுள்ளதுடன் 2019.04.30 ஆம் திகதிக்கு ரூபா 448,262.03 அளவு நிதி மிகுதியாக உள்ளது. அந்நிதியில் ரூபா 285,601 அளவான நிதி புத்தகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.மிகுதரூபா 137,661.03 அளவான நிதியைப் புத்தகத்திற்குக் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வேன். |
| (ஆ) | நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ரூபா1,800,206,000 குறிப்பிடுவதற்குப் பதிலாக ஏனைய நிதி மூலங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 39,611,825 நிதியும் உள்ளடங்கலாக ரூபா 1,839,817,825 அளவான நிதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. நிதி நிலைமை பற்றிய கூற்று | 2018 நவம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட 267/2018 ஆம் இலக்க அரசாங்கக் கணக்கீட்டுச் சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கிறேன். 2019 நிதிச் செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களை சரி செய்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வேன். |

1.6.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ரூபா 240,865,352 பெறுமதியான சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் மீதியாகக் குறிப்பிடப்பட வேண்டும். எனினும், அது ரூபா 5,455,801 பெறுமதி குறைவாக ரூபா 235,409,551 எனக் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட 267/2018 ஆம் இலக்க அரசாங்கக் கணக்கீட்டுச் சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட வேண்டும். | நிதிக் கூற்றில் உள்ள ஏ.சி.ஏ.6 மாதிரியின் பிரகாரம் 2018 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு மீதியாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 235,409,551 பெறுமதியான நிதி சரியென அறிவித்தல் விடுக்கின்றேன்<br><br>2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று அறிக்கையைத் தயார் செய்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இந்தக் குறைகளைச் சரி செய்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வேன். |

**1.6.3** நிதிப் பாய்ச்சற் கூற்று

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவாகிய தேறிய நிதிப் பாய்ச்சல் ரூபா 1,417,524,872 இனால் அதிகமாகவும் முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் உருவாகிய தேறிய நிதிப் பாய்ச்சல் ரூபா 1,417,514,872 | 2018 நவம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட 267/2018 ஆம் இலக்க அரசாங்கக் | நிதிப் பாய்ச்சற் கூற்று முதன் முறையாக 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் குறுக்குக் குறிப்புகள் கொடுப்பனவுகள் |

| | | |
|---|---|---|
| இனால் குறைவாகவும் காட்டப்பட்டதன் காரணமாக தேறிய நிதிப் பாய்ச்சல் ரூபா 10,000 அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. | கணக்கீட்டுச் சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட வேண்டும். | மற்றும் பெறுவனவுகள் பொருந்தும் வகையில் நிதிப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படுகையில் குறைபாடுகள் இடம் பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று அறிக்கையைத் தயார் செய்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இந்தக் குறைகளை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வேன். |

1.6.4. அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான ஒப்பீட்டுக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | முற்பணக் கணக்கின் மாதாந்தக் கணக்குச் சுருக்கத்திற்கு அமைவாகவும் மற்றும் திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புக்களுக்கு அமைவாகவும் கணக்குகளின் பற்று நிலுவைகளுக்கு இடையிலான வேறுபாடு ரூபா **198,884** அளவிலும் வரவு நிலுவைகளுக்கு இடையிலான வேறுபாடு ரூபா **3,788,379** அளவிலும் இணைக்கக் கணக்கில் காட்டப்படுதல் வேண்டும். இருந்த போதிலும் இணைக்கக் கணக்கில் பற்று நிலுவையாக ரூபா **2,475,360** பெறுமதி அளவும் வரவு நிலுவையாக ரூபா **6,258,235** பெறுமதி அளவும் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட 267/2018 ஆம் இலக்க அரசாங்கக் கணக்கீட்டுச் சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்கிறேன். முற்பணக் கணக்கின் 11, 12 பற்று மற்றும் வரவு மீதிகளின் முழு மொத்தம் திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புக்களுக்கு அமைவாக கவனத்தில் எடுக்கப்பட்டு இணைக்கக் கணக்கு தயார் செய்யப்பட்டுள்ளதால் இந்த வேறுபாடு இடம் பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று அறிக்கையைத் தயார் செய்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இந்தக் குறைபாடுகள் இடம் பெறாத வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வேன். |
| (ஆ) | 2018 டிசெம்ர் 31 ஆம் திகதிக்கு திறைசேரிக் குறிப்புக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கில் புத்தகங்களிற்கு அமைய மீதிகளுக்கு இடையில் ரூபா 6,042 பெறுமதி அளவு வேறுபாடு காணப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் 2018 மே மாதம் 10 ஆம் திகதி வரையும் இனங் | ஆவணங்கள், புத்தகங்கள் என்பவற்றை முறையாகப் பேணிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் | கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்கிறேன். 2018 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து முன் கொண்டு வரப்படுகின்ற இந்த வேறுபாடு 2019 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படவில்லை. | எடுக்கப்படல் வேண்டும். | ஆண்டிற்கான கணக்கினைத் தாயார் செய்கின்ற போது அடையாளம் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது சேவையை விட்டுச் சென்ற அலுவலர்கள் மூன்று பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 326,582 பெறுமதியான பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் உறுப்புரையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய கடன்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இடம் பெற்றுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஈ) | இலக்கம் 14001 கீழ் அரச அலுவலர்களின் முற்பணக் கொடுப்பனவு "B" கணக்கின் செலவீனத்தின் உச்ச அளவு ரூபா 655 பெறுமானத்தை மீறிச் சென்று காணப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூன்றாம் உப அட்டவணையில் விடய இலக்கம் 14001 இன் கீழ் செலவீனத்தின் உச்ச எல்லையை மீறாமல் செலவீனங்கள் மேற் கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்கிறேன்.<br>2018 ஆம் ஆண்டிற்கு ரூபா 15 மில்லியன் தொடர்பாக ஒப்புதல் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் ரூபா **16,675,655** செலவு செய்ததன் காரணமாக மேலதிகமாக செலவு செய்யப்பட்ட நிதி தொடர்பில் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. |

**1.6.5** வைப்புக்கள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| பொது வைப்புக் கணக்கில் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி ஆவணங்களுக்கு அமைய மீதி மற்றும் திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புக்களுக்கு அமைய மீதி என்பவற்றுக்கு இடையேயான வேறுபாடு ரூபா **329,397** பெறுமதி ஆகும். | அமைச்சினுடைய புத்தகங்களை திறைசேரியினுடைய புத்தகங்களுடன் ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளல் வேண்டும். | கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ரூபா **329,397** பெறுமதி வேறுபாட்டை அடையாளங் கண்டு சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.6** சொத்துக்கள் ஆலைகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு ஆண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதி அன்று இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புக்களுக்கு அமைய ரூபா **6,761,702** ஆக இருந்த போதிலும் நிதி அல்லாத சொத்துக்கள் பற்றிய கூற்றில் அது ரூபா **1,305,901** என்ற வகையில் குறிப்பிடப்பட்டு உள்ளதன் காரணமாக கொள்வனவு ரூபா **5,455,801** பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | அமைச்சு பேணிச் செல்கின்ற ஆவணங்களை முறையாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். | வருடத்திற்கான கொள்வனவுகளாகக் காட்டப்பட்டுள்ள ரூபா **1,305,901** பெறுமதி அளவு உள்ளடக்கப்பட்டுள்ள போதும் உள்ளடக்கப்பட வேண்டிய பெறுமதி அளவு ரூபா **6,761,702** வாகும் என்பதனை ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | மீளாய்வு ஆண்டின் திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புக்கள் மற்றும் மாதாந்த கணக்குச் சுருக்கங்களுக்கு அமைய தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு ரூபா **6,806,702** பெறுமதி அளவு வரைக்கும் குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் தொடர்பான ஆவணத்திற்கு அமைய மீளாய்வு ஆண்டின் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா **11,980,714** | அமைச்சு பேணிச் செல்கின்ற ஆவணங்களை முறையாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது போன்று செலவுப் பெயரேட்டில் குறைவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை மற்றும் மிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை போன்றன காணப்படுவதை ஏற்றுக் கொள்கிறேன். 2018 ஆம் ஆண்டின் போது புதிய நியமனங்கள் பெற்று கடமையேற்ற அலுவலர்களில் கணிசமான அலுவலர்கள் நிதிப் பிரிவில் கடமை மேற்கொள்வதன் காரணமாக கணக்குப் புத்தகங்களில் பதிவு மேற் கொள்ளும் போது |

| | | |
|---|---|---|
| ஆகக் காணப்படுவதால் வேறுபாடு ரூபா **5,219,012** ஆகும். | | பிழைகள் இடம் பெற்றுள்ளன. எதிர் காலத்தில் நிதிக் கூற்று அறிக்கையைத் தயார் செய்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இந்தக் குறைகளை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வேன். |

**1.6.7** ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | கடனுக்கான வட்டியை அறவிட்டுக் கொள்ளல்.<br><br>அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய வீடமைப்பு தொடர்பாக வழங்கப்படுகின்ற கடன் நிதி தொடர்பில் நூற்றுக்கு நான்கு வீத வட்டி அறவிடப்படும் என குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் அந்த வருமானத்தை ஈட்டிக் கொள்ளல் தொடர்பான தகவல்களோ அல்லது குறிப்பிட்ட வருட காலப் பகுதியில் கிடைக்கப் பெற்ற கடன் வட்டி வருமானங்களோ அல்லது கடனுக்கான வட்டி வருமானத்தை இனங் கண்டு கொள்ளக் கூடிய வகையில் புத்தகங்கள் பேணப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக கணக்குப் புத்தகங்களை முறையாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். | ஏற்கனவே கடன் அறவீடுகள் தொடர்பாக முறையான அமைப்பில் வேறு வேறாகக் கோப்புக்கள் மற்றும் மாதாந்தம் புதுப்பிக்கப் படுகின்ற கடன் அறவீடுகள் தொடர்பான கூற்றுக்களும் பேணப்படுகின்றது என்பதனை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று இங்கு குறிப்பிட்ட அந்தக் கூற்றுக்கள் கடன் வட்டி வருமானத்தை அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய வகையில் பேணிச் செல்வதற்குக் குறிப்பிட்டுக் கொள்கிறேன். |
| (ஆ) | <u>பிணை ஆவணம்</u><br>நிதிப் பிரமாணங்கள் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய பிணை ஆவணம் ஒன்று தயார் செய்யப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தகவல்கள் உள்ளடங்கிய வகையில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் தொடர்பான பிணை ஆவணம் ஒன்று பேணப்படுதல் வேண்டும். | பிணை ஆவணம் ஒன்று தயார் செய்து காலத்துக்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகிறது. |
| (இ) | <u>பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம்</u><br>பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம் நிதிப் பிரமாணங்கள் 214 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் | தரப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம் ஒன்றைப் |

| | | |
|---|---|---|
| இன் பிரகாரம் பேணிச் செல்லப்பட்டு இருக்கவில்லை. | பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம் ஒன்றில் பொறுப்புக்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும். | பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | <u>சுழலும் நிதி தொடர்பாக புத்தகங்களைப் பேணிக் கொள்ளல்</u><br>நிதிப் பிரமாணங்கள் 501 (இ) மற்றும் 502 (ஆ)வின் பிரகாரம் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் நிதி, உரிமை கோரல் சம்பந்தமாக விடப்படுகின்ற பங்குக் கொடுப்பனவுகளைக் கணக்கீடு செய்தல் மற்றும் முதற் கொடுப்பனவு தொடர்பாக அதிகாரத்தினை வழங்கும் போது விதிக்கப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் முழு நிதித் தொகையையும் மீள அறவீடு செய்து கொள்வதற்கு உறுதிப் படுத்தக் கூடிய வகையில் கணக்குப் புத்தகங்கள் பேணப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கணக்குப் புத்தகங்களைப் பேணி கடன் நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளல் வேண்டும். | கடன் அறவீடு தொடர்பான தகவல்கள் அமைச்சில் இல்லை என்பதுடன் வெளிக் கள அலுவலர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களுக்கு அமைய வேலைத் திட்டத்தினை எதிர் காலத்தில் நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

**1.6.8** கணக்காய்வுச் சான்றுகள் இல்லாமை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| | -------------------------------- | ---------- | -------------------------------------- |
| (அ) | கட்டிட வாடகை, சேவை வழங்கல் மற்றும் கட்டுமான திட்டங்களின் செலவீனங்களைப் பரீட்சித்தல் தொடர்பாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் 702 (3) இன் பிரகாரம் ஒப்பந்தங்கள் தொடர்பாக உடன்படிக்கைகள் செய்து கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகிறது. | பதில் பெற்றுக் கொடுக்கப் படவில்லை. |
| (ஆ) | அரச வருமானத்திற்குக் குறைவாக வரவு வைக்கப்பட்ட தொகை 2017 ஆம் ஆண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா **12,531,657** மற்றும் ரூபா **1,618,836** ஆகும் அத்தொகைகளின் கூட்டுத் தொகை ரூபா **14,150,493** ஆகும். | சேகரிக்கப் படுகின்ற அனைத்து கடன்கள் மற்றும் வட்டிகள் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படல் | ஏற்கனவே அபிவிருத்திப் பிரிவின் மூலம் பராமரித்துச் செல்லப்படுகின்ற கூற்றுக்களுக்கு அமைய, 2017 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட மொத்தக் கடன் அறவீட்டுத் தொகை |

அது தொடர்பான காரணங்களும் விளக்கங்களும் முன் வைக்கப்பட்டு இருக்கவில்லை. இருந்த போதிலும், அபிவிருத்திப் பிரிவின் மேலதிகச் செயலாளரின் கடிதத்திற்கு அமைய விபரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(i) 2018 ஆம் ஆண்டின் போது பெருந் தோட்ட வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகளிடமிருந்து வீடமைப்புக் கடன் அறவீடு செய்து ரூபா **19,991,707** அரச வருமானத்திற்கு வைப்பு செய்யப்பட்டு இருந்த போதிலும்ஈ 2018 ஆம் ஆண்டின் போது கடன் மீள அறவீடு செய்யப்பட்ட தொகை ரூபா **21,610,543** எனக் குறிப்பிடப் பட்டிருந்து. அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது கடன் மீள அறவீடு செய்யப்பட்ட தொகை ரூபா **1,618,836** பெறுமதித் தொகை குறைவாக அரச வருமானக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டு இருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி அமைச்சிற்குக் கடன் மீள அறவிடப்பட்ட தொகை ரூபா **13,045,536** மற்றும் பெருந் தோட்ட அபிவிருத்தி நிதியம் மூலம் சேகரிக்கப்பட்டுள்ள கடன் மீளச் செலுத்தப்படாது உள்ள நிதி தொடர்பில் ஈடு செய்யப்பட்டு அவர்களுக்குச் செலுத்த வேண்டிய முகாமைத்துவக் கட்டணம் ரூபா **17,106,132** எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. அதற்கு அமைவாக 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி அரச வருமானத்திற்கு வைப்பு செய்யப்பட வேண்டிய மொத்த மீதி ரூபா **30,151,668** பெறுமதியான தொகையாக இருந்த போதிலும் அரச வருமானத்திற்கு வைப்பு செய்யப்பட்ட தொகை ரூபா **17,620,011** மட்டுமேயாகும்.

வேண்டும். அந்தந்த குறிப்பிட்ட காலப் பகுதிகளுக்கு அறவிடப்பட வேண்டிய கடன் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டித் தொகைகளையும் கணக்கீடு செய்து நிலுவையாக உள்ள செலுத்தப்படாத நிதியை அறவீடு செய்து கொள்வதற்கும் முறையான அமைப்பில் நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

ரூபா **9,270,607.11** ஆகும் என்பதுடன் 2018 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட மொத்தக் கடன் அறவீட்டுத் தொகை ரூபா **21,610,542.98** ஆகும்.

**1.6.9** பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மூலம் மேற் கொள்ளப்பட் வேண்டிய சான்றுரை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக செயற் திறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைத் தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப் படுத்த வேண்டும் என்பதுடன் அந்த முறைமையின் செயற் திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து அதன் அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை செயற் திறன் மிக்க வகையில் நடத்திச் செல்வதற்கு அவசியமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதுடன், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற் கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும், அது போன்ற மீளாய்வுகள் மேற் கொள்ளப்பட்டன என்பதற்கான கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது சரத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்புக்களை பதிவு செய்துள்ளேன். |

**1.6.10** சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுடன் ஒவ்வாமை.

இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கு குறிப்பீடு செய்தல். | இணக்கம் இல்லாமை | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகளின் கோவை. | | | |
| (i) நிதி ஒழுங்கு விதிகள் **104(4)** | பூர்வாங்க பரிசோதனையின் பின்னர் நட்டம் ஏற்பட்ட தினத்தில் இருந்து மூன்று மாதத்திற்குள் முழு அறிக்கை ஒன்று | நிதிப் பிரமாணங்களின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் | பதில் பெற்றுக் கொடுக்கப் படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனினும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத நான்கு சந்தர்ப்பங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். | |
| (ii) | நிதி ஒழுங்கு விதிகள் 570 மற்றும் 571 (1), (3) | வைப்பு செய்யப்பட்ட திகதியில் இருந்து இரண்டு வருடங்கள் தாண்டிய வைப்பு வாய்ப்புக்கள் 35 இன் திரண்ட பெறுமதி ரூபா **9,008,068** தொகை தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் விதிகளுக்கு இணங்க வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். | நிதி ஒழுங்கு விதிகள் 570, 571 (1) மற்றும் 571 (3) என்பவற்றிற்கு இணங்க நிலுவையில் உள்ள அனைத்து வைப்புக்கள் தொடர்பாகவும், நிதி ஒழுங்கு விதிகள் 570 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பட்டியல் ஒன்றை தயார் செய்து கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இரண்டு வருடங்கள் தாண்டிய ரூபா **9,008,068** பெறுமதி தொகை தொடர்பாகவும் விரைவாக நடவடிக்கை மேற் கொள்வேன். |

**1.6.11** அதிகார தத்துவமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.
---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாத வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும் பசுமைப் பொன் வீடமைப்பு வசதித் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்தல் தொடர்பாக ஒப்பந்தப் பெறுமதியில் நூற்றுக்கு 6 வீதம் செலுத்துவதற்கு வேலைத் திட்ட நிர்மாணப் பணி வழிகாட்டல் கோவை மூலம் உடன்பாடு காணப்பட்டுள்ளது. | முறையான ஒப்புதல் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் சட்ட ரீதியாகப் பொறுப்பினை ஒப்படைப்பதற்கு உடன்படிக்கை ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். | பதில் பெற்றுக் கொடுக்கப் படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது நூற்றுக்கு 6 வீத முகாமைத்துவக் கட்டணம் ரூபா **45,781,306** பெறுமதியான தொகை செலுத்தப் பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் வீடுகளின் பெறுமதி தொடர்பாக 2015 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் போது அல்லது மேற் குறிப்பிட்ட முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு நடவடிக்கை மூலம் உறுதி செய்யப்படவில்லை. | | |
| (ஆ) | பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு அமைச்சு சார்பாக கடன் நிதி சேகரிக்கப்பட்டு அமைச்சுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக இருந்த நிலுவை ரூபா 33.2 மில்லியன் பெறுமதியான தொகையாகும். அதற்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4.9 மில்லியன் பெறுமதியான தொகை சேகரிக்கப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வு ஆண்டில் பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் அமைச்சுக்கு செலுத்தப்பட்டிருந்த நிதி ரூபா 7.2 மில்லியன் மட்டுமேயாகும். அதற்கு இணங்க நிதியத்தின் மூலம் அறவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு அமைச்சுக்குச் செலுத்தப்படாதுள்ள தொகையின் பெறுமதி ரூபா 31 மில்லியன் ஆகும். | அரச நிதியை வெளியார் தரப்பினர் வைத்துக் கொள்வதற்கு இடம் கொடுக்காது குறிப்பிட் திகதியில் வைப்பிலிடக் கூடிய வகையில் தேவையான ஒழுங்குகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். | கடன் அறவீடு செய்தல் நேரடியாக பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டு இருந்ததுடன் அந்த நிதி மீண்டும் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. கடன் அறவீடுகள் நேரடியாக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என பெருந்தோட்ட முகாமைக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதி தொடர்பாக திட்டவட்டமான தகவல்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் 2018 08 28 ஆம் திகதிக்கு ரூபா 7,994,450.83 பெறுமதியான நிதித் தொகை பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது.<br>அதே போன்று அமைச்சிற்குச் செலுத்தப்பட வேண்டிய முகாமைத்துவக் கட்டணங்களில் ரூபா **17,106,132.36** பெறுமதியான நிதித் தொகை கடன் அறவீடு என்ற அடிப்படையில் பெருந் தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தினால் அறவீடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

**2** நிதி மீளாய்வு

------------------

**2.1** கிரய முகாமைத்துவம்

----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | மீண்டு வரும் செலவு தலைப்புக்கள் 15 தொடர்பாக ஒதுக்கப்பட்ட நிதி ருபா 29.08 மில்லியன் பெறுமதியான தொகையில் மீதி ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் நூற்றுக்கு 5 வீதத்திலிருந்து நூற்றுக்கு 55 வீதம் வரையான இடைவெளி ஒன்றினை ஏற்படுத்தி இருந்தது. மேலும் மீண்டு வரும் செலவு விடயங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட நிதி ருபா 50,000 பெறுமதியான ஒதுக்கம் நூற்றுக்கு 100 வீதம் மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி ஒழுங்கு விதிகள் 50 இற்கு இணங்க சரியான செலவு மதிப்பீடுகள் தயார் செய்யப்படல் வேண்டும். | திறைசேரியிடம் கோரிக்கை விடுத்த படி முற்பணம் அதே அளவு கிடைக்கவில்லை. அதன் காரணமாக திட்டமிட்ட அடிப்படையில் மீண்டு வரும் செலவுகளை மேற் கொள்வதற்கு இயலவில்லை. மேலும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்ற நிலைமை காரணமாக அமைச்சின் பணியாட் தொகுதியின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப் படாமையும் நிதி ஒதுக்க மீதியில் தாக்கம் செலுத்தியுள்ளது. |
| (ஆ) | மூலதனச் செலவு தலைப்புக்கள் 10 ரொதடர்பாக ஒதுக்கப்பட்ட நிதி ரூபா **2,719**.35 மில்லியன் பெறுமதியான தொகையில் ரூபா **1,665**.32 மில்லியன் பெறுமதியான தொகை செலவு செய்து நூற்றுக்கு 8 வீதம் தொடக்கம் நூற்றுக்கு 90 வீதம் வரையான இடைவெளி எல்லைக்குள் ரூபா **1,054**.03 மில்லியன் பெறுமதியான தொகை மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி ஒழுங்கு விதிகள் 50 இற்கு இணங்க சரியான செலவு மதிப்பீடுகள் தயார் செய்யப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கிறேன். கொள்வனவுகள் தொடர்பான கேள்விகளும் அனுப்பப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் எதிர்பார்க்கப்பட்டது போன்று திறைசேரியில் இருந்து முற்பணம் பெற்றுக் கொடுக்கப்படாத காரணத்தினால் கொள்வனவுகள் மேற் கொள்ள இயலவில்லை என்பதுடன் இதன் காரணமாக ஒதுக்கப்பட்ட நிதி மமிகுதியாகக் காணப்பட்டது. |

**2.2** பொறுப்புக்கள் மற்றும் கடன்களுக்கான உடன்பாட்டை எட்டுதல்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளுக்கு அப்பால் வழங்கல்கள் மற்றும் வேவைகள் என்பவற்றுடன் தொடர்பற்ற 2 செலவுத் தலைப்புக்களின் கீழ் ரூபா **595,688** பெறுமதியான பொறுப்புக்கள் எட்டப்பட்டுள்ளன. | நிதி ஒழுங்கு விதிகள் 94 (1) இற்கு இணங்க பொறுப்புக்கள் சரியான முறையில் இனங் கண்டு கொள்ளப்படல் வேண்டும். | செலவுத் தலைப்புகள் **140-1-2-1301** இன் கீழ் ரூபா **497,345.00** பெறுமதியான தொகை தொடர்பாக பொறுப்புக்கள் எட்டப்படவில்லை என்பதுடன் செலவுத் தலைப்புகள் **140-1-1-1301** இன் கீழ் ரூபா **31,561.00** பெறுமதியான தொகை தொடர்பாக மட்டுமே பொறுப்புக்கள் எட்டப்பட்டுள்ளது. |
| (ஆ) | 20019 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் வரை கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்பட்ட வவுச்சர்கள் இடையே வழங்கல்கள் மற்றும் வேவைகள் என்பவற்றுடன் தொடர்பற்ற 4 செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக மற்றும் தொடர்புற்ற 6 செலவுத் தலைப்புக்கள் சம்பந்தமாக அட்டவணைப் படுத்தப்படாத மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா **1,631,881** ஆகும். | 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதியிடப்பட்ட 255/2017 இலக்க பொதுக் கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கள் என்ற அடிப்படையில் அட்டவணைப் படுத்தப்படல் வேண்டும். | (ஆ), (இ) கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு பொறுப்புக்கள் என்ற வகையில் அட்டவணைப் படுத்தப்படவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கிறேன். 2018. 12. 31 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புற்ற பிரிவின் மூலம் நிதிப் பிரிவிற்கு இந்தப் பொறுப்புக்கள் தொடர்பாக அறிவிக்கப்படாததன் காரணமாக இந்தக் குறைபாடுகள் இடம் பெற்றுள்ளன. |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கைக்கு இணங்க, வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக நான்கு வலயங்கள் சம்பந்தமாக 2018 | நிதி ஒழுங்கு விதிகள் 94 (1) இன் பிரகாரம்இ | 2018 ஆம் ஆண்டின் ஜனவரி 1 ஆம் திகதிக்கு வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக காலி, பதுள்ளை, |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி நிலவிய பொறுப்புக்கள் ரூபா 932.11 மில்லியன் பெறுமதியான தொகையில் 2008 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 305 மில்லியன் மட்டுமே ஆகும். அதற்கு மேலதிகமாக, செயற் திறன் அறிக்கைக்கு இணங்க மீளாய்வு ஆண்டின் போது டிசம்பர் 31 ஆம் திகதிற்குள் பூர்த்தி செய்யபப்படாத 561 வீடுகள் தொடர்பாக ரூபா 1,367 மில்லியன் பெறுமதியான தொகை மற்றும்அதற்கு மேலதிகமாக 2011 ஆம் ஆண்டிற்குள் ரூபா 1,367 மில்லியன் மற்றும் 2017 ஆம் ஆண்டு ரூபா. 627.11 மில்லியன் பெறுமதியான தொகைகள் எனும் அடிப்படையில் ரூபா 1,994.48 மில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் அவதானத்திற்கு உட்பட்டுள்ளது. இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களுக்கு இணங்க பொறுப்புக்கள் எதுவும் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | பொறுப்புக்கள் தொடர்’பான ஆவனம் ஒன்றை காலத்துக்கு காலம் புதுப்பித்துச் செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப் படுதல் வேண்டும் | கேகாலை மற்றும் நுவரலியா போன்ற வலயங்களுக்காக வேண்டி ரூபா 932.11 மில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் காணப்பட்டன. (இணைப்பு - 1) அதே போன்று அபிவிருத்தி பிரிவின் மூலம் பேணிச் செல்லப் படுகின்ற முன்னேற்ற அறிக்கைகளில் ஒவ்வொரு திட்டத்தினதும் மொத்த பொறுப்புக்களின் பெறுமதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது. |

2.3 **வங்கிக் கணக்குகளை இயக்குதல்.**

**பின்வரும் அவதானிப்புகள்** மேற் கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு** அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | 2018 **ஆம் ஆண்டு செப்டம்பர்** 27இ **திகதியிடப்பட்ட கடனை மீட்டெடுப்பதற்காக வேண்டி ஹொரன பெருந்தோட்ட** கம்பனி **முன்வைத்த ரூபா. 126,260 பெறுமதியான இரண்டு காசோலைகள் அமைச்சின் பெயர்** தவறாக **பதியப் பட்டதன் காரணமாக பணமாக மாற்றிக் கொள்வதில் சிக்கள் ஏற்பட்தோடு அந்த காசோலைளை மீளப் பெறுவதற்காக 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ம் திகதி வரை நடவடிக்க எடுக்கப்பட்டிருக்க வில்லை.** | **சரியான உள்கட்டுப் பாடு மற்றும் மேற்பார் வையுடன் நிதிபரிவர்த் தனைகளை க் கையாளுத ல்.** | **அமைச்சின் பெயரில் மாற்றம் ஏற்பட்டதால் இந்த இரண்டு காசோலைகளும் திருப்பி விடப்பட்டுள்ளன.** |
| (ஆ) | 2018 **ஆம் ஆண்டு டிசம்பர்** 31 **ஆம் திகதி உடன் முடிவடைந்த கடைசி மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட** வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்**களின்படி**இ **அடையாளம் காணப்படாத கிடைப்பனவுகள் ஒரு மாதம் முதல் பதின் மூன்று மாதங்கள் வரை மொத்தம் ரூபா** 1இ407இ650 **ஆகும்**. **அந்த நிலுவையில்**இ **வீட்டுக் கடன்** | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயார்படுத்தி பெற்ற வருமானங்களைச் சரியாக இனம் கண்டு **அவற்றை புத்தகங்கள் மற்றும் கணக்குகளு க்குமாற்றி** | **பதில் கொடுக்கப்பட வில்லை** |

| | | |
|---|---|---|
| | **மீட்பு நிறுவனங்களில் இருந்து நேரடியாக அமைச்சின் நடப்புக் கணக்கில் ரூபா.** 526**இ**060 வைப்பிலிடப்பட்டடுள்ளது. **அது அடையாளம் காணப்பட்டும் அரசாங்க வருவாய்க்கு கொண்டு வரப்படவில்லை**. | **அரசாங்க வருவாய்க்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.** |

**3** செயற்பாட்டு ஆய்வு

----------------------------

## 3.1 திட்டமிடல்

------------------

**பின்வரும் அவதானிப்புகள்** மேற் கொள்ளப் படுகின்றன.

| | **கணக்காய்வு** அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| | -------------------------------------------------- | ----------------- | ------------------------------------------------------------------------ |
| (அ) | 2014 **ஆம் ஆண்டு பெப்ரவரி** 14 **ஆம் திகதி**யிடப்பட்ட 2014.`.` 01 **நிதி சுற்றறிக்கையின்** 03 **ஆவது** பந்தியில் **பின் வரும் தகவல்கள்** 2018 **ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டத்தில உள்ளடக்கப் பட்டில்லை என்பது கண்டறியப்பட்டது**.<br> **மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான அமைச்சின் கட்டமைப்பு மற்றும் தற்போது பணியாற்றும் சேவை ஊழியர்கள்.**<br> **செயல்படுத்தப்பட வேண்டிய காலக் கெடு தனிப்பட்ட திட்டங்களாக வரையறுக்கப் படவில்லை**. | **சுற்றறிக்கை யில்உள்ள அறிவுறுத்தல்களின் படி அனைத்து தகவல்களையும் சேர்த்து செயற் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்**. | பந்திகளில் **கொடுக்கப் பட்டுள்ள தகவல்களுடன் நான் உடன் படுகிறேன்**. **கணக்காய்வு உத்தரவுப்படி** 2019 **ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தை அதற்கு ஏற்பதயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.** |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட செயற் திட்டம் மற்றும் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட செயற் திறன் அறிக்கை ஒவ்வொரு பகுதி மற்றும் தோட்டங்களாக பிரித்து தகவல்லை பெற்றுக் கொள்ளும் விதமாக ஒழுங்கு படுத்தாமையால் வீட்டுத் திட்டங்களின்இ 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பௌதீக மற்றும் நிதி செயற் திறனை துல்லியமாக மதிப்பிட முடியவில்லை. | அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் விதமாக செயற் திட்டம் மற்றும் செயற் திறன் அறிக்கை சரியான நேரத்தில் மற்றும் பௌதீக ரீதியாக பரிசோதிக்கப்பட முடியுமான விதத்தில் தயார்படுத்தப் பட வேண்டும் | பந்திகளில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளுடன் நான் உடன்படுகிறேன். கணக்காய்வு உத்தரவுப்படி 2019 ஆம் ஆண்டிற்கான செயற் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>2018 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட செயற் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு திட்டத்திற்கும் கீழ் வருடாந்த இலக்குகள் மற்றும் ஒவ் வொன்றுக்குமான ஒதுக்கீடுகள் கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளது.<br><br>ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு குறிப்பிட்ட பொது திட்ட காலக் கெடு இருக்கலாம். என்றாலும், செயற் திட்டத்தின் திட்டங்கள் பரிந்துரைக்கப் படும் விதத்திற்கு அமைய அனைத்து திட்டங்ளையும் செயற்திட்ட அறிக்கையில் சேர்ப்பதானது நடைமுறைச் சாத்தியமற்றது. |

## 3.2 எதிர்பார்த்த அடைவைப் பெறாமை

**பின் வரும் அவதானிப்புகள்** மேற் கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு** அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் வீடமைப்புத் திட்டத்தில் இரண்டு கட்டங்களின் | திட்டமிட்ட படி வீடுளை | 2018 ஆம் ஆண்டில் கோரப்பட்ட ஒதுக்கீடுகள் போதியளவு |

| | | |
|---|---|---|
| **கீழ் நிறைவு படுத்த இருந்த ரூபா 219இ000இ000 பெறுமதியான 219 வீடுகள் இவ் வருடத்திற்குள் ஆரம்பிப்பதற்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்க வில்லை** | **அமைப்பதற் கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.** | **கிடைக்காமையும், அத் திட்டங்கள் செயல்படுத்தப் படும் பகுதிகளில் நிலவும் கனத்த மழை உடன் கூடிய கால நிலை மற்றும் பொருத்தமான நிலங்களைத் தேர்ந்து எடுப்பதற்கான** ஙேசுழு **அறிக்கைகளைப் பெறுவதில் தாமதம் ஆகியவை காரணமாக எதிர்பார்த்த முடிவுகளைப் பெற முடியாமல் போனது.** |

3.3 **திட்டங்களை நிறைவு படுத்தாமல்** கை விடுதல்

---------------------------------------------------------------------------------

**பின் வரும் அவதானிப்புகள்** மேற் கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு** அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| **இந்த ஆண்டின் இறுதியில் .2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப் பட்ட ரூபா 27,000,000 மதிப்பிடப் பட்ட செலவீனத்தில் வருட இறுதியில் செலவாகிய ரூபா 5,590,000 பெறுமதி**யான **மில்ல விட்டியா, அலு பொல, வெள்ளவல மற்றும் சுலூடன் பண்டிய ஆகிய நான்கு திட்டங்கள் நிறைவு செய்யாமலே கை விடப்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது.** | **திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு சாத்தியமான ஆய்வு மேற் கொள்ளப்படவேண் டும். மற்றும் கட்டுமானத்திற்கு ஏற்ற கானிகளை அடையாளம் காண்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மற்றும்** | 2018 **ஆம் ஆண்டில் திட்டங்ளை நிறைவு செய்யாமல் கைவிடப் பட வில்லை என்பதை அறியத் தருகிறோம்.** |

| | | | |
|---|---|---|---|
| | | | கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப் படுதல் வேண்டும். கை விடப்பட்ட திட்டங்ளை பரிசோதித்து, செலவினங்ளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4** திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதங்கள்

---

**பின் வரும் அவதானிப்புகள்** மேற் கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு** அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | 2018 **ஆம் ஆண்டில்** 83 **திட்டங்கள் செய்து முடிப்பதற்காக ரூபா** 1இ996இ375இ141 **மதிப்பீடாக தயார் படுத்தப் பட்டிருந்தது. அதன்** 32 **திட்டங்களில்,** 488 **வீடுகள் நிர்மானிக்கப்பட இருந்தும்** 189 **வீடுகள் மட்டுமே நிறைவுக்கு உட்படுத்தப் பட்டு இருந்தன.** | **திட்டங்களை சரியான நேரத்தில் செயல் படுத்தும் வகையில் முறையான விதத்தில் திட்டங்கள் தயாரிக்கப் பட வேண்டும்.** | 2018 **ஆம் ஆண்டின் ஹரிதரன் வீட்டு வசதித் திட்டம்** 2018 **ஆம் ஆண்டு நடுப் பகுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பெருந்தோட்ட மனித வள மேம்பாட்டு பொறுப்பதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டிருந்தாலும், என்.பி.ஆர்.ஓ அறிக்கைகளைப் பெறுவதில் தாமதம் மற்றும் அந்த வீடுகளை நிர்மாணிக்க பொருத்தமான நிலங்களை சம்பந்தப்பட்ட தோட்ட நிறுவனங்களால் பெறுவதில் தாமதமும்** ழேசுழ **ஆண்டு** |
| (ஆ) | 2018 **ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கையின் படி, ஆண்டின் தொடக்கத்தில்** 3345 **வீடுகள் நிர்மானிக்கப் பட இருந்தன,** 2018 | **சரியான** | |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது முடிக்கப்பட்டு இருந்த வீடுகளின் எண்ணிக்கை 1458 மட்டுமே ஆகும். | நேரத்தில் செயல் படுத்தும் வகையில் முறையான விதத்தில் திட்டங்கள் தயாரிக்கப் பட வேண்டும். | அறிக்கை பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் 2018 ஆம் ஆண்டில் எதிர் பார்த்த படி தேவையான நிதியை திறைசேரி வெளியிடாமையால் அந்த வீட்டுத் திட்டத்தை குறித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்ற முடியவில்லை. |

3.5 **வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| **கணக்காய்வு** அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்கான செயற் திட்டம், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட செயற் திறன் அறிக்கைகள் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான முன்னேற்ற அறிக்கைகள் ஆகியவற்றுக்கு இடையே பின் வரும் முரண்பாடுகள் காரணமாக இந்த அறிக்கைகளின் உண்மைத் தன்மை பற்றி கணக்காய்வின் போது திருப்தி காண முடியவில்லை.<br>ை 2018 ஆம் ஆண்டிற்கான செயற் திட்டத்தில், பசுமை தங்க | துல்லியமான தகவல்களின் அடிப்படையில் வருடாந்த செயற் திறன் அறிக்கையைத் தயார் படுத்துவதற்கு பிரிவுகளிடையே சரியான நேரத்தில் தகவல்களைப் பகிர்வதை உறுதி செய்தல் மற்றும் தேவையான | மேம்பாட்டுப் பிரிவு, செயற் திறன் அறிக்கைக்கு வீட்டுக் கடன்களை வசூலிப்பது குறித்த தகவல்களை வழங்கியது. எவ்வாறாயினும், இந்த மாற்றம் ஆலோசிக்கப் பட்டுள்ளதாகவும், சரியான தகவல்களின் படி வருடாந்த செயற் திறன் அறிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அபிவிருத்தி பிரிவுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். |

| | |
|---|---|
| வீட்டு வசதி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 1500 வீடுகளை நிர்மாணிக்க முன் மொழியப்பட்டுள்ளது, எனினும் செயற் திறன் அறிக்கையில் மொழியப் பட்ட வீட்டு எண்ணிக்கை 1566 எனவும் முன்னேற்ற அறிக்கையில் வீடுகளின் எண்ணிக்கை 1136 ஆகவும் காட்டப் பட்டிருந்தது. | ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப் படுதல் வேண்டும். |
| ை 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி செயற் திறன் அறிக்கையின் நிலவரப் படி ,2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டி முடிக்கப்படாத வீடுகளின் எண்ணிக்கை 2543 ஆக இருந்தது, ஆனால் 2018 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி நிலவரப் படி கட்டி முடிக்கப்படாத வீடுகளின் எண்ணிக்கை 2567 ஆக இருந்தது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தில், ஆண்டின் ஆரம்ப நாளன்று 3325 வீடுகளுக்கான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் முன்னேற்ற அறிக்கைகளின் படி, 2018 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதிக்கு கட்டி முடிக்கப்படாத வீடுகளின் | |

எண்ணிக்கை 3345 ஆக காட்டப்பட்டு இருந்தது.

ைை 2018 ஆம் ஆண்டு முன்னேற்ற அறிக்கை யின் படி, பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1458 ஆக இருந்தது, ஆனால் செயல் திறன் அறிக்கையின் படி பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 936 ஆகும்.

ை முன்னேற்ற அறிக்கையில் பசுமை தங்க வீட்டு வசதி திட்டத்தின் முதற் கட்ட வீடுகளின் எண்ணிக்கையை 571 என பட்டியலிட்டு இருந்தாலும் உண்மையான மொத்தத் தொகை 323 ஆகும்.

(ஆ) பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட செயற் திறன் அறிக்கை மற்றும் செயற் திட்டம் தயாரிப்பதில் பின் வரும் குறைபாடுகள் இருந்ததால் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஒவ்வொரு வீட்டுத் திட்டங்களினதும் பௌதீக மற்றும் நிதி செயற் திறனை தனித் தனியாக ஆராய முடிய வில்லை.

(ை) ஒவ்வொரு பகுதி மற்றும் இலக்குகள்

சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற் திட்டத்திற்கு பொருத்தமான செயற் திறன் அறிக்கையுடன் பௌதீக ரீதியாக சோதிக்க முடியுமான விதத்தில்

2018 ஆம் ஆண்டு திருத்தப் பட்ட செயற் திட்டத்தில் பொருத்தமான செயற்பாடுகளுக்கு இலக்குகளுடன் கூடிய வெளியீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தோட்டங்களாக பிரித்து தனி த்தனியாக செயற் திட்டம் தயாரிக்காமை. | உள்ளடக்கப் பட்டு தயாரிக்கப் பட வேண்டும். |
| (ஐ) திட்டங்களுக்கான செயற் திறன் அறிக்கையில் அதன் ஆரம்ப மற்றும் இறுதித் திகதிகள் இன்மையால், வீடொன்றை கட்டு வதற்கான எட்டு மாத திட்டமிடப்பட்ட காலம் கடந்த திட்டங்களின் தாமதத்தை அடையாளம் காண முடியவில்லை. | |

## 3.6 வெளி நாட்டு உதவித் திட்டங்கள்

பின் வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| ஹட்டன் தொழிற் பயிற்சி நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஹட்டன் தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு இந்திய அரசு ரூபா. 94 மில்லியன் மற்றும் அரசாங்கத்தின் ஊடாக ரூபா 15 மில்லியன் ஒதுக்கீடுகள் தயார் படுத்தப் பட்டு இருந்தும் 2018 ஆம் ஆண்டிற்குள் வெளி நாட்டு உதவிகள் செலவழிக்கப்படாது அரசாங்கத்தின் ஒதுக்கீடான ரூபா. 1.43 மில்லியன் மாத்திரம் செலவழிக்கப் பட்டு இருந்தது. | அதிகபட்ச உற்பத்தித் திறனை அடைவதற்கு அரசாங்கத்தினதும் வெளி நாட்டு உதவிகளாலும் அதிகபட்ச பலன் கிடைக்கும் விதமாக செயல்படுவதற்கு போதுமான திட்டமிடல்கள் தயார் படுத்தப் | நில அளவீடு மற்றும் மண் பரிசோதனையின் போது எதிர்பார்க்கப் பட்டதை விட அதிக நேரம் செலவிடப்பட்டது. மேலும், பயிற்சி உபகரணங்கள் கொள் முதல் மற்றும் கட்டிடத்தின் டெண்டரிங் வேலைகளுடன் ஒன்றித்து செயற் படுவதற்கு திட்டம் இடப் பட்டதால் எதிர்பார்த்த செயற்பாடுகளுக்கு |

| | | |
|---|---|---|
| | பட்டு செயற்படுத்துவதற்கும் வழி வகுக்க வேண்டும். | பணம் ஒதுக்க முடியாமல் போனது. |

## 3.7 உள்ளூர் நிதி உதவிகளால் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்

------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| (அ) மீளாய்வு **செய்யப்பட்ட ஆண்டில் அமைச்சினால் நிதி அளிக்கப்பட்ட** 3 **திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா.** 2,600 **மில்லியனில் ரூபா** 1,588.31 **மில்லியன் செலவழித்தமை**யால் **ரூபா** 1,011.69 **மில்லியன் அதாவது** 38.91% **ஒதுக்கீடு மீதமாகி இருந்தது.** | **நிதி விதி முறைகள் 50 பிரகாரம் சரியான செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டும்.** | **பொருத்தமான நிலங்களைத் தேர்ந்து எடுப்பதில் தாமதம், அத்தகைய நிலங்களை விடுவித்தல் மற்றும்** 2018 **ஆம் ஆண்டுக்கான போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காமை போன்ற காரணங்களினால் 2018 ஆம் ஆண்டிற்கு என ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாக செலவிட முடியவில்லை.** |

### (ஆ) கொடியாகல வீட்டுத் திட்டம்

-----------------------------------------------------

| | | |
|---|---|---|
| (a) 184 **வீடுகளை நிர்மாணிப்பதற்கான டெண்டரை வழங்கும் போது,** | **அரசாங்க கொள் முதல் வழிகாட்டுதலின்** | **கொடியாகல வீட்டுத் திட்டத்தில்** 184 **வீடுகளை நிர்மாணிப்பதற்காக** |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தக் காரரின் தகைமைகளை பரசோதிக்காது நான்காவது குறைந்த பட்ச விலையை மதிப்பிடாமல் ஐந்தாவது மிகக் குறைந்த ஏலதாரர் தேர்ந்து எடுக்கப்பட்டார். மேலும், 2016 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அன்று ஒப்பந்தக் காரருடன் கையெழுத்து இட்ட ஒப்பந்தத்தில் ஆரம்ப திகதி மற்றும் இறுதித் திகதிகள், தாமதக் கட்டணம் தொடர்பானநிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தத்தின் மதிப்பும் குறிப்பிடப்பட்டு இருக்க வில்லை. | விதிகளுக்கு ஏற்ப கொள் முதல் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | ஈஸ்ட் லங்கா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் 14 ஏலங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. குறைந்த பட்ச விலையை முன் வைத்த முதலாவதும் இரண்டாவதும் நிறுவனங்களின் ஊடாக கடந்தகால கட்டுமானங்கள் தொடர்பான தகவல்களை வழங்க முடியாமல் சென்றமையாலும் இரண்டாம் விலையை நிர்ணயித்த நிறுவனத்துக்கு 150 வீடுகள் வழங்கப்பட்டதால் இந்த வீட்டுத் திட்டத்தை வழங்க முடியவில்லை. மூன்றாவது குறைந்த பட்ச விலை ஆகிய இந்த ஒப்பந்ததாரி முன்வைத்த விலைக்கு அவர்கள்தெரிவித்த விலையை விட ரூபா. 21000 குறைவாக வீடொன்றை நிறுவுவதற்கு ஏற்றுக் கொண்டமை ஆல் |

| | | |
|---|---|---|
| | | அவர்களிடம் ஒப்டைக்கப் பட்டது. |
| (ை)ஒப்பந்தம் வழங்கப்பட்ட சிறிது காலத்திலேயே, 2016 ஆம் ஆண்டு ஜூன் 08 ஆம் திகதி அன்று ேடேசுழு இன் நிலச் சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் மேலாண்மை பிரிவில் இருந்து இந்த அறிக்கை பெறப்பட்டது. அந்தத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பரிந்துரைகளுக்கு அமைய திட்டமிடல்களை செய்யத் தவறியதால், பூர்த்தி செய்யப்பட்ட 42 வீடுகள் பயனாளிகளால் பெறப்பட்டு இருந்தன. | திட்டத்திற்கான தளத்தைத் தேர்ந்து எடுப்பதற்குமஇ ேடேசுழு இன் அறிக்கையின்படி பொருத்தமான வீடுகளைத் தேர்ந் தெடுப்பதற்கும், ஒப்பந்தத்தை முறையாகக் கண் காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இந்த கட்டுமான பணியை பொறுப்பு ஏற்ற ஒப்பந்ததாரி பிரயாணம் மற்றும் ஏனைய செலவுகள் அதிகமாகையாலும் கடினமான இடமாக இருந்த்தன் காரணத்தாலும் கட்டுமானப் பணியை தாமதப் படுத்தினார். இருப்பினும், வீடு கட்டி முடிக்க ஒப்பந்த காலத்தை நீடிக்க முடிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ணை) 184 வீடுகளில் 42 வீடுகள் மட்டுமே நிறைவடைந்து உள்ளதாகவும், மீதமுள்ள கட்டுமானப் பணிகள் ஒப்பந்தக் காரரால் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகு நிறுத்தப் பட்டு உள்ளதாகவும் கொட்டியாகல தோட்டத்தின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். இந்த திட்டத்திற்கு செலுத்தக் கூடிய அதிக பட்ச தொகை ரூபா 26,830,910இ ஆனால்இ 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 31,964,677 அதன் படி, ரூபா 5இ133இ766 தொகை மேலதிகமாக செலுத்தப் பட்டுள்ளது. | அரசாங்க கொள் முதல் வழி காட்டுதலின் விதிகளின்படி ஒப்பந்தங்கள்செய ல் படுத்தப்பட வேண்டும். | இந்த இடத்திற்கு 184 வீடுகள் திட்டமிடப்பட்டன, ஆனால் சுற்றுச் சூழல் பிரச்சினை காரணமாக 42 வீடுகள் மட்டுமே முடிக்கப்பட வேண்டி இருந்தது. ஏற்பட்ட அதிக செலவு காரணமாக, அவர் அந்த இடத்தை விட்டு வெளியேறி உள்ளார். இது குறித்து அவருக்கு பல சந்தர்ப்பங்களில் தகவல் அளிக்கப்பட்டதோடு, அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இக்தாத் நிறுவனத்துக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நிறுவனம் மேற் கொண்ட கூடுதல் பணிகளுக்கு பற்றுச் சீட்டுக்கள் எதுவும் சமர்ப்பிக்கப் படவில்லை. இதன் விளைவாக, இங்கு காட்டப்பட்ட பணம் அதிக கட்டணம் செலுத்தியதாக குறிக்கப்பட்டுள்ளது. |
| (ளை) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 42 வீடுகளின் பயனாளிகள் மூலம் சுட்டிக்க காட்டப்பட்ட குறைபாடுளை நிவர்தி செய்வதற்காக வேண்டி 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ம் திகதி இன்னுமொரு நிறுவனமாகிய பெருன்டினா நிறுவனத்துடன் 2018 ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதிற்கு முன்னர் வேலலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வெளிப்படைத் தன்மை மற்றும் கொள்வனவு நடைமுறைகள் ஏதும் இன்றி ரூபா 7 மில்லியன் | அரசாங்க கொள் முதல் வழி காட்டுதலின் விதிகளின்படி ஒப்பந்தங்கள்செய ல் படுத்தப்பட வேண்டும். | இந்த இடத்திற்கு 184 |

ஒப்பந்தம் ஒன்றிற்கு இணங்கி ரூபா 1.36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. **அங்கீகரிக்கப்பட்ட விதிகளை மீறும் இந்த செலவுக**ளும் **மேற் கூறிய தொகைக்கு** மேலதிகமாக **அரசாங்கத்திற்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளன.**

**வீடுகள் திட்டமிடப்பட்டன, ஆனால் சுற்றுச் சூழல் பிரச்சினை காரணமாக** 42 **வீடுகள் மட்டுமே முடிக்கப்பட வேண்டி இருந்தது**. **ஏற்பட்ட அதிக செலவு காரணமாக**, **அவர் அந்த இடத்தை விட்டு வெளியேறி உள்ளார்**. **இது குறித்து அவருக்கு பல சந்தர்ப்பங்களில் தகவல் அளிக்கப்பட்டதோடு, அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இக்தாத் நிறுவனத்துக்கு தெரிவிக்கப்பட்டது**. **இந்த நிறுவனம் மேற் கொண்ட கூடுதல் பணிகளுக்கு** பற்றுச் சீட்டுக்கள் **எதுவும் சமர்ப்பிக்கப் படவில்லை**. **இதன் விளைவாக, இங்கு காட்டப்பட்ட பணம் அதிக கட்டணம் செலுத்தியதாக குறிக்கப்பட்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| (இ) பசுமை தங்க வீட்டுத் திட்டத்தின் கீழ் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் பௌதீக பரிசோதனையின் போது, இந்த வீடுகள் கொள் முதல் வழிகாட்டுதல்களுக்கு முரணானவை மற்றும் மோசமான நிலையில் உள்ளன என்பது உறுதி செய்யப்பட்டது.<br><br>(ை)வீடுகளில் கான்கிரீட் இடப் படுவதற்கு முன்னர் மண் சரியாக தட்டப்படவில்லை என்பதையும், கான்கிரீட் கலவைக்கு மண் கலப்பட்டு மிக இலகுவாக உடைக்க முடியுமான அளவில் பலவீனப்பட்டுள்ள பலவீனமான சிமென்ட் மணல் கலவை பயன்படுத்தப்பட்டு உள்ளதையும் காணமுடிந்தது. மேலும், வீட்டின் கான்கிரீட் தளத்திற்கான மதிப்பீடு 3 அங்குலங்கள் இருக்க வேண்டும் என்றாலும், இது 1.5இ 2 மற்றும் 2.5 அங்குல தடிப்பமாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. | ஒப்பந்தத்தைமேற் பார்வையிட்ட தரப்பினரால் முறையான கண்காணிப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். | மதிப்பீட்டின் உருப்பு 3.4 இன் படி, வீட்டின் நிலத்துக்கான கொன்கிறீட்டின் தடிமன் 3 ஆக இருக்க வேண்டிய நிலையில் சில இடங்களில் 3 க்கும் குறைவாகவோ கூடுதலாகவோ இருக்கமுடியும். அவ்வாறு மாற்றமுறுவதற்கு நிலம் சமாந்தரமின்மைஅல்லது நிலத்தை சீர் படுத்தும் போது சரியாக சமாந்தரப் படுத்தாமை காரணமாகலாம். சில இடங்களில் தடிமன் குறைவாக இருக்குமெனின் ஒப்பந்தக் காரர்களுக்கு கொடுப்பனவ குறைத்து வழங்கப்படும். |
| (ை)2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் திகதி அன்றுஇ திட்டத்தின் கணக்காய்வுகளின் படி ஓபல்கல தோட்டத்தின் எலகல பிரிவில் ரூபா 19 மில்லியன் மதிப்பில் 20 | திட்டத்திற்கான தளத்தைத் தேர்ந்து எடுப்பதற்கும், டீேசுழு அறிக்கையின் படி பொருத்தமான | வீட்டுத் திட்டத்திற்கான நிலத்தைத் தேர்ந்து எடுக்கும் போது தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் |

| | | |
|---|---|---|
| **வீடுகள் நிர்மானிக்கும் திட்டத்தில்** 14 **வீடுகள் மட்டுமே கட்டப்பட்டது. வீடுகள் நிலச்சரிவு அபாயத்தில் இருந்ததோடு பாதியில் நிறுத்தப்பட்டிருந்த கான்கிரீட் தூண்கள்** கறை **படிந்து சேதம் அடைந்திருந்தன.** | **வீடுகளைத் தேர்ந்து எடுப்பதற்கும், ஒப்பந்தத்தை முறையாகக் கண் காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.** | (**என்.பி.ஆர்.ஓ**) **பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, மண்பாதுகாப்பு தொடர்பான திட்டங்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும்,** கறை **பிடித்த கம்பிகளை சுத்தம் செய்து சரி செய்யவும் ஒப்பந்தக் காரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.** |

3.8 **கொள்முதல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| (அ) **கொள்முதல்** வழிகாட்டற் கோவை 4.1 மற்றும் 4.2 உறுப்புரைகளின் பிரகாரம் **ஒப்பந்தத்திற்கு முந்தைய கட்டம் மற்றும் கொள்முத**லின் **பிந்தைய கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய திட்டங்கள்** கணக்காய்வுக்குச் **சமர்ப்பிக்கப்படவில்லை.** | **அரசாங்க கொள்முதல்** வழிகாட்டற் கோவை **விதிகளை கணக்கில் எடுத்துக் கொண்டு கொள்முதல் திட்டங்களை தயாரி**க்க **வேண்டும்.** | 2019 **ஆம் ஆண்டிற்கான** கணக்காய்வு **அறிக்கையில்** சுட்டிக் **காட்டப்பட்டுள்ள அனைத்து கொள்முதல் ஆவணங்க**ளையும் தயார் செய்வதற்கு ஏற்பாடு செய்வேன். |
| (ஆ) **அமைச்சினால் செயல் படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் ஒப்பந்த மேற் பார்வைக்கு மேலதிகமாக, ஒப்பந்தக் காரர்களைத் தேர்ந்** | **அரசாங்க கொள்முதல்** வழிகாட்டற் கோவை விதிகள் 8.12.1 (**அ**) **இன் அறிவுறுத்தல்களுக்** | 21.∴ 09.∴ 2015 **திகதியிட்ட** 1933.∴13 **இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி மூலம்** |

| | | |
|---|---|---|
| **தெடுப்பது மற்றும் ஒப்பந்தக் காரர்களுக்கு பணம் செலுத்துதல்** போன்றவற்றை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்டமை **கொள்முதல்** வழிகாட்டற் கோவை 8.12.1 (அ) உறுப்புரைகளின் பிரகாரம் மீறியுள்ளமை **அவதானிக்கப்பட்டன**. **மேலும், ஒப்பந்தக் கார்ர்களின் பெயரில் செலுத்த வேண்டிய காசோலைகளை** முதலில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பெயரில் வழங்குவதற்காகப் பெற்றுக் கொண்ட **ஒப்புதல்** கணக்காய்வு**க்கு சமர்ப்பிக்கப்பட வில்லை..** | **கு இணங்க** செயற்படுவதற்கு **தேவையான ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப் படுதல் வேண்டும்** | **இந்த** பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் **அமைச்சின் கீழ் உள்ள ஒரு நிறுவனமாக உறுதிப்படுத்தப் பட்டு அதன் அடிப்டையில் இந்தத் திட்டங்கள் வழங்கப் பட்டுள்ளது என்பதை** பணி**வுடன் நான் அறிவிக்கிறேன். இந்த திட்டங்கள் தோட்ட ஊழியர்களின் வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயல் படுத்தப் படுகின்றன, ஏனெனில் அந்தந்த தோட்ட நிறுவனங்கள் வழங்கும் நிலத்திற்கு வெளியாட்கள்** நுழைவு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. |

**3.9** சொத்துக்கள் முகாமை

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| **சௌம்ய மூர்த்தி** தொண்டமான் ஞாபகார்த்த **அமைப்பின் கீழ் இயங்கும் பூல் வங்கி தொழிற் பயிற்சி மையம், ரம்பொட கலாச்சார மையம், நோர்வூட்** | **சொத்துக்க ளைமுறை யாகப் பெறுவதற் கும் நிதி** | **சௌம்ய மூர்த்தி** தொண்டமான் ஞாபகார்த்த **அமைப்பின் கீழ் காணப்பட்ட பூல் வங்கி தொழில் பயிற்சி மையம், ரம்பொட கலாச்சார மையம்,** |

| | | |
|---|---|---|
| விளையாட்டு வளாகம் மற்றும் பிரஜா சக்தி மையம் ஆகிய நான்கு நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளையும் ஆய்வு செய்து சொத்துக்களை முறையாக அமைச்சுக்கு கையகப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்க வில்லை. மேலும், நிதி விதி முறைகளின் 755 (1) மற்றும் (2) ஆகியவற்றிற்கு இணங்க அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் திகதி வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இதன் விளைவாக, இந்த நான்கு நிறுவனங்களுக்கும் சொந்தமான சொத்துக்களை 2017 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதி யிடப்பட்ட சொத்து முகாமைச் சுற்றறிக்கை எண் 1/12017 ற்கு இணங்க, கம்ட்ரோல் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பித்ததிருக்க வில்லை. | விதி முறைகளுக்கு இணங்க அறிக்கைகளைத் தயாரித்து முன் வைப்பதற்கும்தேவையான ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப் படுதல் வேண்டும் | நோர்வூட் விளையாட்டு வளாகம் மற்றும் பிரஜா சக்தி மையம் ஆகியவற்றின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அமைச்சுக்கு கையகப் படுத்தும் போது பொருட்களின் கணக்கெடுப்பு மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்க வில்லை. கையகப் படுத்திய பின்னர் 2018 ஆம் அண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உடன் முடிவடைந்த ஆண்டிற்கான பொருட்களின் கணக்கெடுப்பை 2019 ஆம் அண்டு ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்பு மேற் கொள்வதற்கு நடவடிக்கள் திட்டமிடப்பட்டுள்ளன. |

## 3.10 வெளியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **அமைச்சுக் கட்டிடத்தின் தரைத் தளத்தில் அமைந்து உள்ள பால் நிலையத்துடன் கூடிய கட்டிடத்தை அமைச்சின் நலன் புரிச் சங்கத்தால் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு வெளித் தரப்பு ஒன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டு இருந்தது. அத்துடன் பால் நிலையத்தில் மின்சாரம் மற்றும் குடி நீருக்கான செலவு மேலும் அதற்கான கூலியை அமைச்சுக்கு அறவிட்டு அரச வருமானமாக வசூலிக்கப்பட வில்லை.** | **அமைச்சின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு வழங்கப்பட்டு இருந்த சொத்துக்களை பிற நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும்போது .அமைச்சின் நோக்கங்களுக்கு இடையூறு விளைவிக்காதசொத்துக்கள் மாத்திரம் முறையாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.** | **பதில் கொடுக்கப்பட வில்லை** |

**3.11 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | **2015 ஆம் ஆண்டு முதல் இருந்து வருகின்ற மொத்தம் ரூபா 109இ006 இன் மூன்று இழப்புகள் சம்பந்தமாக நிதி ஒழுங்கு விதிகள் 113 (4) ற்கு இணங்க மீட்கவோ அல்லது கழிப்பதற்கோ 2018 ஆம் ஆண்டு** | **நிதி ஒழுங்கு விதி முறைகளுக்கு இணங்க செயல்பட** | **ஏற்றுக் கொள்கிறேன்.**<br><br>**2019 ஆம் ஆண்டில், நிதி ஒழுங்கு விதி முறை 113 (4) ற்கு இணங்க செயற்படுவேன்** |

| | | | |
|---|---|---|---|
| | டிசம்பர் 31 ஆம் திகதி வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | வேண்டும். | |
| (ஆ) | 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒதுக்கிய வாகனம் விபத்துக்கு உள்ளான போது,அதனை திருத்துவதற்கு மூன்றாம் தரப்பு காப்பீடு மாத்திரம் ஏற்படுத்தி இருப்பதன் காரணமாக ரூபா 1,032,130 பணம் செலவழிக்க வேண்டி இருந்தது. இது தொடர்பில் பொறுப்பான இரண்டு அதிகாரிகளிடமிருந்து பழுது பார்க்கும் செலவை மீட்டெடுக்க 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் திகதியிட்ட நிதி ஒழுங்கு முறை 104 (4) அறிக்கை பரிந்துரைக்கிறது, ஆனால் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை, எந்த தொகையும் மீட்கப்பட வில்லை. | நிதி ஒழுங்கு விதி முறையின் அடிப்படையில்செய்யப்பட்ட பரிந்துரைகளைசெயல் படுத்துதல் வேண்டும். | 2016. 08. 22 ஆம் திகதி அன்று துலு 2916 வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து சமபந்தமாக எப். ஆர் 104 (4) இன் கீழ் நடத்தப்பட்ட விசாரணையின் இறுதி அறிக்கை, வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்தை பணிப்பாளர் நாயகம் மற்றும் சாரதியிடம் இருந்து மீட்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அந்த இரண்டு அதிகாரிகள் ராஜினாமா செய்துள்ளனர். அதன்படி, தனிப்பட்ட கோப்புக்கள் மூலம் அவர்களுடைய தகவல்களை பெற்று குறிப்பிட்ட பணத்தை பெறுவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளனர். |
| (இ) | 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் முடீ–9614 இலக்கத்தை உடைய வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்தால் ஏற்பட்ட ரூபா 272,276 பெறுமதியான இழப்பு இது வரை மீட்கப்பட வில்லை. | நிதி விதி முறைகளின் 113 (4) இன் கீழ் பணத்தை மீட்க அல்லது கழிக்கநடவடிக்கை | முடீ–9614 இலக்கத்தை உடைய வாகனம் விபத்துக்கு உட்பட்டதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 272,276/= இழப்பை வாகனத்தின் சாரதியாக கடமை புரிந்த சமன் பிரதீப் குமாராவின் சம்பளத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டு மே மாதம் முதல் மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**எடுக்கப்**
**பட**
**வேண்டும்**

4. **நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| **நிலையான அபிவிருத்தி இலக்குகளின் படி**, 2020 **சிறு வீடுகளில் வசிக்கும் தோட்ட சமூகத்தி**னரிற்கு **குடி நீர்**, **மின்சாரம் மற்றும் நுளைவு வசதி கொண்ட ஏழு பர்சஸ் நிலத்துடன்** கூடிய 2000 **வீட்டு அலகுகள் வழங்கப்படுவதாக**க் குறிப்பிடப்பட்டு இருந்தது. **இருப்பினும்**, 2018 **ஆம் ஆண்டில் முன் மொழியப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை கட்டப்பட வில்லை, மற்றும் கட்டப்பட்ட வீடுகள் தரமானதாக இல்லை மேலும் பயனாளிகள் அவற்றில் குடியேறவோ அல்லது எடுத்துக் கொள்ளவோ இல்லை**. | 2020 **ஆம் ஆண்டு இறுதி ஆகும் போது நிலையான அபிவிருத் தி இலக்குகளி ன் படி முன் மொழியப்ப ட்ட இலக்குக ளை அடைந்து கொள்வதற் காகசெயற் பட வேண்டும்.** | **பதில் கொடுக்கப்பட வில்லை** |

5. **பொது மக்களுக்கான சேவைகளை நிலை நாட்டல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | **பொது புகார்களை ஏற்றுக் கொள்வதற்காக வேண்டி வலைத் தளம் ஒன்று உருவாக்கப்பட்டு இருந்தும் பொது மக்களிடம் இருந்து புகார்களைச் சேகரிப்பதற்கான ஒரு பொறி முறையை உருவாக்கவில்லை.** | **பொது புகார்களுக்கான பொறி முறையை நிறுவ வேண்டும்** | **அமைச்சின் வலைத் தளம் உருவாக்கப்பட்டு இருந்தாலும், இன்னும் அதிகமான வேலைகள் செய்யப்பட வேண்டி உள்ளன. அந்த சந்தர்பத்தில் இந்த விடயங்கள் உள்ளடக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.** |
| (ஆ) | **வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளும் போது வறுமை** பீடிக்கப்பட்டு **வீட்டு** உ**ரிமை இன்றி வாழுகின்ற விசேட தேவையுடைய மக்களுக்கு இந்த வீடுகள் கிடைக்கப் பெறுவதில்லை என்றும் அவர்ளை இனம் காண்ப**தற்கு **சரியான வழி முறை ஒன்று இல்லை என்றும் மக்களின் அபிப்பிராயங்கள் கிடைக்கப் பெற்று இருந்தன.** | **பெறுநர்கள் தேர்வு செயல் முறையை சரியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.** | 2017 **ஆம் ஆண்டில்** 411 **வீடுகள் நிர்மானிப்பதற்கான அனுமதி உள்ளது.** 2018 **ஆம் ஆண்டில் அமைச்சகத்தால் பெறப்பட்ட வீட்டுக் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது, குறிப்பாக நிலச் சரிவு மற்றும் நிலச் சரிவு ஏற்படக் கூடிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு.** 2018 **ஆம் ஆண்டு டிசம்பர்** 31 **ஆம் திகதி நிலவரப்படி, மேலே உள்ள** 411 வீடுகளில் 85 **வீடுகள் மட்டுமே** |

| | | | |
|---|---|---|---|
| | | | **முழுமையாக**க் கட்டி **முடிக்கப்பட்டுள்ளன.** |
| (இ) | மண் சரிவு காரணமாக **இடம் பெயர்ந்தோருக்காக ஐலா தோட்ட பகுதியில்** 47 **வீடுகள் நிர்மானிப்பதற்கு 2018 ம் ஆண்டு** ரூபா 47,000,000 **ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது**. அந்த வீடமைப்புத் திட்டத்திற்காக 2018. 02. 12 ஆம் திகதி பெருந் தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் ஐலா தோட்ட **ஊழியர் கூட்டுறவு சங்கத்துடன் ஒரு வீட்டிற்கு ரூபா** 950,000 **பெறுமதியான தொகை** என்ற அடிப்படையில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. **ஒப்பந்தத்தின் படி, வீட்டுத் திட்டம்** 2018 **ஆம் ஆண்டு செப்டம்பர்** 12 **ஆம் திகதிற்குள் முடிக்கப்பட இருந்தது. ஆனால்** கணக்காய்வு **செய்யப்பட்ட திகதி ஆகிய** 2019 **ஆம் ஆண்டு ஏப்ரல்** 26 **ஆம் திகதி ஆகும் போது கட்டுமானத்திற்காக நிலத்தை சீர் படுத்துவது மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது.** | **பொதுமக்களுக் கு சேவைகளை வழங்கும் போது முன்னுரிமை அளிக்க வேண்டிய பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து தேவையான அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்த ப் பட வேண்டும். அரசாங்க நிதியை திறம்பட** மற்றும் பயனுள்ளதாகப் ப**யன் படுத்துவதற்கா** | **பதில் கொடுக்கப்பட வில்லை** |

**னதிட்டங்கள்**
தயாரிக்ப்படல்
வேண்டும்.

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| 2018 **ஆம் ஆண்டு டிசம்பர்** 31 **ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட** பணியாட்கள் எல்லை 341 **பேரில் 223 சேவையாளர்கள்** மட்டுமே **ப**ணி**யாற்றுவதன் காரணமாக** 118 வெற்றிடங்கள் **இருந்தன**. | **அமைச்சின் செயற் திறனுக்கு ஊழியர்** வெற்றிடங்கள் **குறிப்பாக பாதிப்பை ஏற்படுத்து வதனால்** | வெற்றிடங்களைப் நிரப்புமாறு பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சின் **செயலாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது**. |

அவற்றை
நிவர்த்திப்ப
தற்கு
உடனடி
நடவடிக்
கை எடுக்க
வேண்டும்.